உ

குருபாதம்

# சங்காபிஷேகம்

பல்வேறு மந்திர தந்திர யந்திர வழிபாட்டு முறைகளி-னால் ஆராதிக்கப்படும்போது, இறையருளை முன்வைத்து, இறைத்தன்மையை ஈர்த்துத் தன்னுள் தேக்கி வைத்துக் கொண்டு, தன்னை வணங்குவோருக்கு அருள் புரியும் வல்லமை உள்ள பொருள்தான் விக்ரஹம். திருக்கோயில் கருவறை மூர்த்தங்களுக்கு அவ்வப்போது நிகழ்விக்கப் பெறும் அர்ச்சனாதி பூஜைகளும் நீராட்டுகளும் இறைச் சக்தியை அதிகரித்து அம்மூர்த்தங்களுக்குள் தேக்கி வைப்பதற்காக ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வழி.

சைவ சமயத்தில் தீட்சை எடுத்துக் கொள்பவர்களும், சோமவார விரதம் எடுத்துக் கொள்பவர்களும் கார்த்திகை மாத சோமவாரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆகமத்தில் ஒரு குறிப்பு உள்ளது.

மண்பாண்டத்தை விட பித்தளை உத்தமம்.

பித்தளையை விட செம்பு உத்தமம்.

செம்பை விட வெள்ளி உத்தமம்.

வெள்ளியை விட சொர்ணம் உத்தமம்.

அனைத்திற்கும் மேலாக உத்தமத்தில் உத்தமமாக உள்ளது சங்கு. எனவே சிவாலயங்களில் 108, 1008 சங்காபிஷேகம் நடைபெறுகிறது.

முறையாக செய்யப்படும் சங்காபிஷேகம் ஒரு கும்பாபிஷேகத்திற்கு இணையானது.

எனவே கார்த்திகை மாத சோமவார சங்காபிஷேக தரிசனம் மிகச்சிறப்பு. அனைவரும் கார்த்திகை சோமவார சங்காபிஷேக தரிசனம் செய்து இறையருள் பெறுவோம்.

அன்பே சிவம்

www.sivabhogam.com
sivabhogam@gmail.com
Follow us on
+91 9444039366

தொலைபேசி: 2814 2642

உ

# தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்

## வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்

158, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017.

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை உள்ளேவைத்து
விருப்பொடு நல்தூப தீபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே"

## திருக்கடவூர் கார்த்திகை சோமவாரம்
## 1008 சங்காபிஷேகப் பிரசாதம் வழங்கும் விழா

## அழைப்பிதழ்

அன்புடையீர்

ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளாலும், ஆயிரம் பிறை கண்டு கனகாபிஷேகம் கொண்டருளிய தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியாலும், நமது நிலைய மன்றத்தில் திருக்கடவூர் கார்த்திகை சோமவாரம் 1008 சங்காபிஷேகப் பிரசாதம் வழங்கும் விழா நிகழ்ச்சி நிரலில் காணும்வண்ணம் சிறப்புற நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

18-11-2014 செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணிமுதல்
சிறப்புரை: சிவஸ்ரீ T.R.V. இராமலிங்க குருக்கள் (எ) சிவக்குமார்
மூர்த்தியின் சிறப்பு

25-11-2014 செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணிமுதல்
சிறப்புரை: சிவஸ்ரீ K. சண்முகசுந்தரக் குருக்கள்
தலத்தின் சிறப்பு

2-12-2014 செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணிமுதல்
சிறப்புரை: சிவஸ்ரீ சுவாமிநாத குருக்கள்
தீர்த்தச் சிறப்பு

9-12-2014 செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணிமுதல்
சிறப்புரை: சிவஸ்ரீ முத்து குருக்கள்
ஸ்ரீ அபிராமி பட்டர்

16-12-2014 செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணிமுதல்
சிறப்புரை: சிவஸ்ரீ T.R.V. இராமலிங்க குருக்கள் (எ) சிவக்குமார்
ஸ்ரீ அபிராமி அன்னை

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி,

சென்னை-17.
9-11-2014

**சிவ. மதிவாணன்**
நிலையக் கண்காணிப்பாளர்

daspnchennai@gmail.com

உ

# குருபாதம்

உ

## திருக்கடவூர் அருள்மிகு அமிர்தகடேசுவரர் சங்காபிஷேகச் சிறப்பு:

திருக்கடவூர் அருள்மிகு அமிர்தகடேசுவரர் திருக்கோயில் தருமையாதீன அருளாட்சியில் உள்ளது. அட்ட வீரட்டங்களுள் மார்க்கண்டேயர்க்காக காலனை சம்ஹாரம் செய்த தலம். அறுபத்து மூவரில் ஒருவரான குங்கிலியக்கலய நாயனார் அவதரித்த தலம். அபிராமி பட்டர் அன்னை அபிராமியை வழிபட்டு அருள்பெற்ற தலம். கார்த்திகை மாதத்தில் சோமவாரம்தோறும் நடைபெறும் சங்காபிஷேகம் மிகவும் சிறப்புடையது. திருக்கடவூரிலிருந்து 1கிமீ. தொலைவில் உள்ள கடவூர் மயானத்தில் மார்க்கண்டேயர்க்காக ஏற்பட்ட அசுவதி தீர்த்தம் அல்லது மார்க்கண்டேய தீர்த்தத்திலிருந்து நாள்தோறும் அருள்மிகு அமிர்தகடேசுவரர் திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்வது வழக்கம். இன்றும் அவ்வாறே நடைபெறுகிறது.

ஒருமுறை சரபோஜி மன்னன் கடவூர் மயானத்தில் வழிபாடு செய்த பொழுது அத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு பிரம்மபுரீசுவரர்க்கு அபிஷேகம் செய்யக் கட்டளை இட்டான். சிவாச்சாரியார் மன்னன் கட்டளையை மீற இயலாது அசுவத தீர்த்த நீரைப் பிரம்மபுரீசுவரர்க்கு அபிஷேகம் செய்தார். இதனால் அருள்மிகு பிரம்மபுரீசுவரர் சிரசு விரிசல் கண்டது. மன்னனுக்கு மாகோதரம் எனப்படும் மேக நோய் ஏற்பட்டதால் அவதியுற்றான், ஆண்டவனைத் தொழுதான். அப்பொழுது நோய்க்குக் காரணம் "அசுவதி தீர்த்த நீரை அருள்மிகு பிரம்மபுரீசுவரர்க்கு அபிஷேகம் செய்தமையேயாகும். இதற்குப் பரிகாரம் வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள 360 வகையான மூலிகை, பழங்களைக் கொண்டு சங்கினால் அபிஷேகம் செய்தால் இந்நோய் தீரும்" என அசரீரியாக எழுந்தது. நலம் குன்றிய மன்னன் மூலிகைகளைக் கொணர்ந்து அருள்மிகு அமிர்தகடேசுவரர்க்கு கார்த்திகை சோமவாரத்தில் 1008 சங்குகளைக் கொண்டு அபிஷேகம் செய்வித்து வழிபட்டு நோய் நீங்கப் பெற்றான். அதுமுதலாக சங்காபிஷேகம் நடைபெற்று வருகிறது.

இன்று பல திருக்கோயில்களிலும் சங்காபிஷேகம் நடைபெற்றாலும் முதன்முதலில் சங்காபிஷேகம் திருக்கடவூரில்தான் நடைபெற்றதாகத் தெரியவருகிறது. இத்தீர்த்தம் எவ்வளவு நாள்கள் வைத்திருந்தாலும் கெட்டுப்போவதில்லை; கங்கை போலத் தூய்மையாய் இருக்கிறது. இது சிறந்த மருந்தாகத் திகழ்கிறது. இதனை உண்போர் உடல் நோய், உள நோய் நீங்கி நற்பயன் பெறுகின்றனர். திருக்கடவூர் சென்று வழிபட இயலாதவர்களுக்காக தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சென்னை வாழ்மக்கள் நற்பயன் பெறவேண்டும் என்ற அருள்நோக்கால் சங்காபிஷேகத் தீர்த்தத்தை ஒரு சிவாச்சாரியார் மூலம் கிடைக்கச்செய்து அருள்பாலித்தருளுகின்றார்கள். அன்பர்கள் வழிபட்டுத் தீர்த்தம் பெற்று உடல்நோய், உளநோய் நீங்கி குருவருளும், திருவருளும் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

Ph 044-2472 2129